183793

# ஞானாமிர்தம்

Q23:417X8
N26
183793

1247

கோலாலம்பூர் மலேய சைவ சித்தாந்த சங்கத்தின் வெளியீடு—க

உ

# ஞானாமிர்தம்

(சமயமும் நால்வர் பிரபாவமும்)

OFFICE OF THE REGISTRAR ... MADRAS
2-DEC 1926

அ. சிவகுருநாத பிள்ளை

188793

3

உ

கணபதி துணை

# ஞானமிர்தம்

## க. சமயம்

திருச்சிற்றம்பலம்

“ வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே ”

“ தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை யுடைமை யெமையிகழார் - தம்மை
யுணரா ருணரா ருடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன் ”

O23:91736
N26

சமயமாவது மனிதர்கள் அறிவு விளக்கம்பெற்று உறுதியெய்தி இன்பவாழ்வு அடைதற்குச் சாதகமாயுள்ள ஞானுலயமாம். சமயம், காணப்படும் அசேதனப் பிரபஞ்சமாகிய உலகத்தின் சொரூபத்தினையும், அதுபோலக் காட்சியினுல் எளிதில் அறிய வராது அநுமானப் பிரமாணத்தினுல் ஊகித்து இனிது அறிய நிற்கும் சேதனப் பிரபஞ்சமாகிய ஆன்மாக்களின் சொரூபத்தினையும், முழுமுதற் கடவுளாகிய பரமான்மாவின் சொரூபத்தினையும், ஐய விபரீதமில்லாமல் தெளிவாகக் காட்டும் ஞான தீபமாம். சமயம் மனிதர் சரீர சுகத்திற்கும் ஆன்ம சுகத்திற்கும் அநுகூலமாகும் நன்மைகளை விதித்து, அவ்விரண்டு சுகத்திற்கும் பிரதிகூலமாகும் தீமைகளை விலக்கி, அவரைக் [illegible]மாம். சமயம் மனிதர் [illegible] பெறுங் கல்வி, செல்வம், [illegible]றுகளுக்கு [illegible] தாரதம்மியம் பெற்று [illegible]வி வாழுதற்குரிய லௌகிக வைதிக ஒழுக்க

[illegible]நாடு [illegible] காப்பக [illegible]
123793

களைப் போதிக்கும் நீதிநிலையமாம். சமயம் மனிதர்களுக்குக் கரும சாதனங்களை அறிவிக்கும் தந்திர கலாரூபமாம். சமயம் மனிதர்க்குத் தெய்வ உபாசனைகளைத் தெரிவிக்கும் மந்திர கலாரூபமாம். சமயம் மனிதர்க்கு நித்தியாநித்திய வஸ்துவிவேகத்தினை உணர்த்தும் உபதேச கலாரூபமாம். சுருங்கச்சொல்லின், சமயம் மனிதர்களுடைய இகபர சுகங்களுக்கு இன்றியமையாத சாதகங்களெல்லாவற்றினையும் அவர்களுக்குக் குறைவறக் கொடுக்குஞ் சர்வ சத்தப் பிரமரூபமான ஒரு கற்பகதரு எனப்படும்.

சமயம் முதற்கடவுள் நிறுத்தியதும், முதற்கடவுள் ஆணையினால் தத்துவஞான சித்தியுடையோர் நிறுத்தியனவும், கலைஞான சித்தியுடையோர் நிறுத்தியனவும், பிராகிருத விசேடபுத்திமான்கள் நிறுத்தியனவும், பிராகிருத சாமானிய புத்திமான்கள் நிறுத்தியனவுமெனப் பலவகைப்படும். முதற்கடவுள் நிறுத்திய சமயம் மேற்சொல்லிய இலக்கணங்களும் அவைபோல்வனவுமாகும் நலங்கள் பிறவும் ஒருங்குடையதாய்த் திரிபின்றி மற்றைச் சமயங்கள் சொல்லும் பொருள்களெல்லாம் தன்னிடத்தடங்கக்கொண்டு விளங்கும் பூரண மார்க்கமாம். மற்றைத் தத்துவஞான சித்தியுடையார் முதலியோர் நிறுத்திய சமயங்களெல்லாம் ஒவ்வோர் வகுப்பினராயுள்ள அதிகாரிகளுக்கே உரியனவாய்க் காலந்தோறும் தன்மை வேறுபட்டுவரும் ஏகதேச மார்க்கங்களாம்.

இனிப் பிராகிருத சாமானிய புத்திமான்கள் நிறுத்திய சமயங்களை நோக்கப் பிராகிருத விசேட புத்திமான்கள் நிறுத்திய சமயங்கள் வியாபகமாம். பிராகிருத விசேட புத்திமான்கள் நிறுத்திய சமயங்களை நோக்கக் கலைஞான சித்தியுடையார் நிறுத்திய சமயங்கள் வியாபகமாம். கலைஞான சித்தியுடையார் நிறுத்திய சமயங்களை நோக்கத் தத்துவஞான சித்தியுடையோர் நிறுத்திய சமயங்கள் வியாபகமாம். தத்துவஞான சித்தியுடையோர் நிறுத்திய சமயங்களை நோக்க முதற்கடவுள் நிறுத்திய சமயம் வியாபகமாம்.

இனி முதற்கடவுள் நிறுத்திய சமயம் சமய அரசான அதீத சமயமெனவும், தத்துவஞான சித்தியுடையார் நிறுத்திய சமயங்கள் அகச்சமயங்களெனவும், கலைஞான சித்தியுடையார் நிறுத்திய சமயங்

கள் அகப்புறச் சமயங்களெனவும், பிராகிருத விசேடபுத்திமான்கள் நிறுத்திய சமயங்கள் புறச்சமயங்களெனவும், பிராகிருத சாமானிய புத்திமான்கள் நிறுத்திய சமயங்கள் புறப்புறச் சமயங்களெனவும் அறிஞரால் வழங்கப்படும்.

இனி முதற்கடவுள் நிறுத்திய சமயம் ஒன்றேயாம். ஏனையோர் நிறுத்திய சமய வகைகள் நான்கும் ஒவ்வொரு வகையிற் பற்பல பகுதியுடையனவாய் அப்பகுதியுள்ளும் ஒவ்வொரு பகுதியிற் பற்பல பேதமுடையனவாய் விரிந்து நடக்கும். இன்னும், மேன்மேற் சமயங்களை நோக்கக் கீழ்க்கீழ்ச் சமயங்கள் பொய்யாய்க் காணப்படும்; அங்ஙனமாயினும், ஒவ்வொரு சமயங்களும் ஒவ்வோர் வகுப்பினராகிய அதிகாரிகளின் பொருட்டு வேண்டப்பட்டுப் பயன்படுவனவாகிச் சத்தியமாகவே போற்றிக் கோடற்பாலனவாம். உண்மையாகப் பார்க்குமிடத்து இறைவன் நிறுத்திய சமயமே எல்லாப்படியினுலுஞ் சத்தியமாம். ஏனையோர் நிறுத்திய சமயங்கள் மேன்மேல் நோக்கச் சத்தியமிகுந்தும் கீழ்க்கீழ் நோக்கச் சத்தியங் குறைந்துங் காணப்படும். அதுவன்றி முழுதும் அசத்தியமாய்க் காணப்படுஞ் சமயம் ஒன்றும் இல்லையென்க.

கீழ்ச் சமயங்களில் நிற்பவர் அவைகள் சொல்லும் அறங்களை வழுவாது அநுட்டிப்பின், அந்த அநுட்டான பலத்தினுல் மேற்சமயஞ் சார்ந்து, இப்படியே இறுதியில் முதற்கடவுள் நிறுத்திய அதீத சன்மார்க்கம் எய்தப்பெற்று, அது சொல்லும் ஞான சாதனங் கடைப்பிடித்து அநுட்டித்துத் தத்துவ ஞானசித்தி கைகூடிப் பரமுத்தி எய்துவர். இந்த நியாயத்தினுல், மற்றைச் சமயகோடிகளெல்லாம் பரம்பரையில் முத்திக்கு வாயில்களாமென்றும் முதற்கடவுள் நிறுத்திய அதீத அருள்மார்க்கம் சாக்ஷாத்தாகவே முத்திக்கு வாயிலாமென்றும் அறிக. இன்னும், மற்றைச் சமய கோடிகளெல்லாம் இறைவன் அருட்சன்மார்க்கத்தினை அடைவித்தலாகிய முக்கியப் பிரயோசனத்தினைத் தருதலேயன்றி ஒவ்வோர் புண்ணியலோகப் பிராப்தியாகிய அவாந்தரப் பிரயோஜனங்களையும் தனித்தனி தரவல்லனவாம்.

புறப்புறச் சமய பேதங்களும், புறச்சமய பேதங்களும், அகப்புறச் சமய பேதங்களும், முதற்கடவுள் அதிஷ்டிக்கும் தூல மாயா

தத்துவங்களுள் ஒவ்வொன்றினையும், சூக்கும மாயாதத்துவங்களுள் ஒவ்வொன்றினையும், அதிசூக்கும மாயா தத்துவங்களுள் ஒவ்வொன்றினையும், முறையே தெய்வ ஸ்தானமாகவும் முத்தி ஸ்தானமாகவுங் கொண்டு நிற்கும். அகச்சமய பேதங்கள் முதற்கடவுள் அதிஷ்டிக்கும் ஸ்தடத்த வடிவங்களாகிய மாயா சுத்த தத்துவங்களுள் ஒவ்வொன்றினைத் தெய்வ ஸ்தானமாகவும் முத்தி ஸ்தானமாகவுங் கொண்டு நிற்கும். அதீத சன்மார்க்கமோ தத்துவாதீதமாயுள்ள முதற்கடவுளின் சொரூப சின்மய வெளியினையே தெய்வ சந்நிதியாவும் முத்தி முடிபாகவுங் கொண்டு நிற்கும்.

இனி இது முதற்கடவுள் நிறுத்திய பூரண சமயமென்றும், இவை தத்துவஞான சித்தியுடையார் முதலியோர் நிறுத்திய சமய பேதங்களென்றும், இப்பொதுவுரையில் வரைந்து சொல்லோம். இலக்கணங்கொண்டு இலக்கியம் வரையறுத்து உணர்வார்போலச் சமயங்கள் சொல்லும் பொருட்பலாபலங்கொண்டு இது முதற்கடவுள் நிறுத்திய ஆதிப் பெருஞ்சமயம், இவை ஏனையோர் நிறுத்திய சோபான சமயங்கள் என்றும், இவற்றுள்ளும் இப்பிரபலத்தினல் இது உயர்ந்தது, இத்துர்ப்பலத்தினல் இது அதனில் தாழ்ந்தது என்றும், சமய வரையறை எய்தத் தாரதம்மிய விவேகஞ் செய்தல் விவேகிகள் கடனும்.

இனிச் சமயங்களின் வன்மையும் மென்மையும் பகுத்தறிதற்கு அநுகூலமாகுங் கருவிகள் பல உண்டு. அவற்றுள், அவ்வன்மை மென்மை வேறுபாடுகள் இலகுவாக அறிய நிற்கும் பொதுக்கருவிகள் சில சொல்வாம். எந்தச் சமயம் தான் பரம்பொருளெனக் கூறுந்தெய்வத்திற்கு நால்வகை யோனிவாய்ப்பட்டுப் பிறந்து இறந்துவருங் கர்மகதி கூறிற்றில்லையோ அது வலியுடைய சற்சமயம். எந்தச் சமயம் தான் பரம்பொருளெனக் கூறுந் தெய்வத்திற்கு நால்வகை யோனி வாய்ப்பட்டுப் பிறந்து இறந்து செல்லுங் கர்மகதி கூறிற்றோ அந்தச் சமயம் மென்மையுடைய அசற்சமயம். எந்தச் சமயம் பிற சமயங்களும் சாஸ்திரங்களும் சொல்லும் பொருளெல்லாம் தன்கண் அடங்கக்கொண்டு அவை சொல்லாத பல நுண்பொருள் சொல்லி மேம்படுமோ அந்தச் சமயம் வலியுடைய சற்சமயம். எந்தச் சமயம் அவ்

வாறின்றி ஏகதேசப் பொருள்மாத்திரமே சொல்லிக் கீழ்ப்படுமோ அந்தச் சமயம் மென்மையுடைய அசற்சமயம். எந்தச் சமயம் சமயங் களெல்லாஞ் சீவர்கள் கன்மபேதத்திற்கு ஏற்க முதற்கடவுள் நிறுத்தி யன வென்னுமோ அந்தச் சமயம் வலியுடைய சற்சமயம். எந்தச் சம யம் தன்னைச்சுட்டி இவ்வொரு சமயமே கடவுள் நிறுத்தியது ஏனைச் சமயங்களெல்லாம் மனிதர் தாமே கட்டி நடத்தினவென்னுமோ அந் தச் சமயம் மெலிவுடைய அசற்சமயம். எந்தச் சமயம் யாதொரு தெய் வங்கொண்டு வழிபாடு செய்யினும் முதற்கடவுள் அவ்வத் தெய்வங்க ளிடமாக நின்று அவ்வழிபாடு கொண்டருளி அருள் வழங்குவரென் னுமோ அந்தச் சமயம் வலியுடைய சற்சமயம். எந்தச் சமயம் தான் கூறும் சமயம் வழிபாடொன்றனையே கடவுள் கொண்டு அருள்செய்வர் அல்லாச் சமய வழிபாடெல்லாம் கடவுள் கொண்டு அருள் வழங்கார், அவ்வழிபாடெல்லாம் வீண் செயல்களென்னுமோ அந்தச்சமயம் மெலிவுடைய அசற்சமயம். இவையும் இவைபோல்வன அளவைகள் பிறவுஞ் சமய வன்மை மென்மை வரையறுத்தற்கு அநுகூலமாகும் பொது இலகு கருவிகள் என்று அறிக. நால்வகை யோனியுள் ஒன்றிற் பட்டுப் பிறந்திறவாமை கடவுட்டன்மையாதலாலும், அப்படிப் பிறந் திறத்தல் ஜீவ கதியாதலாலும், எல்லாச்சமயப் பொருளும் அடங் கக்கூறி அவை கூறாத நுண்பொருளுங் கூறிவைத்தல் வியாபக அறி வுத்தன்மையாதலாலும், சில பகுதிப் பொருளே அடங்க உரைத்து வைத்தல் சிற்றறிவுத் தன்மையாதலாலும், அறிவின் தாரதம்மியத்தி னாற் பல பகுப்புடைய மாணுக்கர் பலர்க்கும் அவரவர்க்கேற்குமாறு கலைகளைத் தூலாவருந்ததி நியாயம்பற்றிப் பருப்பொருளாகவும் நுண் பொருளாகவும் வகுத்துக்கொண்டு நல்லறிவுச் சுடர் கொளுத்துதல் போலப் பக்குவ பேதத்தினாற் பலவகைப்பட்டு நிற்கும் புருஷ கோடி கள் அனைவர்க்கும் அவர் அவர்க்கு ஏற்கும் வண்ணம் உண்மை ஞானத் தினைத் தூல சூக்குமமாகப் பலவகைப் படுத்திக்கொண்டு கிரமத்தில் ஞானம் விளங்கப் பெரிதருள் செய்தல் பேரருளும் பெருநாயகத் தன் மையுமாய் முடிதலாலும், அப்படியன்றி ஒரு வகுப்பார்க்கு ஒரு வகைக் கலை அறிவு கொளுத்தல்போல ஒருவகைப் புருஷர்கள் மாத்திரைக்கே ஒரு ஏகதேச சமயம் வகுத்து அற்ப ஞானம் அருளுதல் ஏகதேச அரு ளும் ஏகதேச நாயகத் தன்மையுமாய் முடிதலாலும், எல்லாத் தெய்

வங்கள் இடமாக நின்று வழிபாடுகள் கொண்டு அருளுதல் வியாபக வருட் பெருங்குணமாய் முடிதலாலும், ஓரிடத்து நின்று வழிபாடு கொண்டு அருள் செய்து அல்லாவிடத்து நின்று வழிபாடு கொண்டு அருள் செய்யமாட்டாமை வியாப்பியவருட் சிறு குணமாய் முடிதலாலும், இவை சமய வன்மை மென்மைகளை உள்ளபடி இலகுவாக அளந்தறிதற்கேற்ற அளவைக் கருவிகளாதல் காண்க.

முதற்கடவுள் புருஷர்கள் தத்துவ ஞானமெய்தி உய்யச் சமயம் வகுத்த அநாதி காலத்தில் அதனை ஒன்றாக நிறுத்தாமல் பலபேதப்பட இங்ஙனம் நிறுத்தியது என்னையோவெனின், ஒரு கலாசாலையிற் கற்கும் மாணாக்கர்கள் பிறப்பினால் ஒரு தன்மையுடையவராயினும், அறிவின் தீவிர மந்த விளக்க பேதத்தினால் பல வேறுபாடுடையராயிருத்தல்பற்றி அவரைப் பல வகுப்பினராகப் பிரித்து அவ்வகைகளுக்கேற்ப நுட்பமாகவும் பரிதாகவும் கல்விகளைப் பலவகைப்படுத்துக் கற்பித்தல்போல, புருஷர்கள் பிறப்பினால் ஒரு தன்மையராயினும், பக்குவ பேதங்கள் காரணமாகத் தீவிரமாகவும் மந்தமாகவும் விளங்கும் அறிவின் தாரதம்மிய விளக்கமுடையராய் இருத்தலினால், கருணாநிதியாகிய கடவுள் அவர் அவர்க்கு ஏற்கும்படி நுண்பொருளுடையனவாகவும் பருப்பொருளுடையனவாகவும் சமயங்கள் பல நிறுத்தினர். அதனால், அது நீதியேயாமன்றிக் குற்றமாக மாட்டாதென்க. சிலர் இம்முறை தெரியாமல், கடவுள் ஆதியில் நிறுத்திய சமயம் ஒன்றே ; மற்றைச் சமயங்களெல்லாம் காலந்தோறும் மனிதர் கடவுள் கருத்துக்கு மாறாகக் கட்டி நடத்தின வென்பர். அது பொருந்தாது. என்னை? கடவுள் சர்வ சத்தியையுடைய சுதந்திரராதலினால், சத்தி சிறிதுடைய சுதந்திரமில்லாத மனிதர் கடவுள் சுதந்திர சங்கற்ப சத்தியைக்கடந்து அங்ஙனம் சமயங்கள் கட்டி நடத்தக் கருவியும் இடமும் காலமும் முயற்சியும் பெறுதல் கூடாமையாலென்க. அதுவேயுமன்றிப் பக்குவ பேதமுடைய புருஷர்களைப் படிவரிசையினாலன்றி ஒரு படியில் வைத்து ஒப்ப அறிவு விளக்குதல் கடவுளின் பெரிய அருளொப்புரவுக்குக் குற்றமாயுமுடியும்.

இனிச் சமயங்கள் தத்துவ ஆசார விசேட நுட்ப கதிகள் பற்றிப் பேதப்படினும், தர்க்க நூல்களுக்கெல்லாம் இணங்கும் லௌகிக

சித்தாந்தங்கள்பற்றியும், நீதி நூல்களுக்கெல்லாம் இணங்குங் கொல்லாமை, புலாலுண்ணுமை, களவுசெய்யாமை, கள்ளுண்ணுமை, பிறர் மனை விரும்பாமை முதலிய நீதிகள் பற்றியும், பேதப்படாவாம். சில மிலேச்ச சமயங்கள் முற்சொல்லிய தர்க்க சித்தாந்த விரோதமாகும் அவசித்தாந்தங்களும் நீதி விரோதமாகும் கொலை, புலாலுணல், கள்ளுணல் முதலிய அநாசாரங்களும் சமயப்பொருளாகக் கொண்டுரைக்கும். ஆரிய கலைஞான சித்தாந்த அறிவுக்கும் நீதிக்கும் வெகு தூரமாய் ஒதுங்கின காரணத்தினுல், அந்த அநாரிய சமயங்கள் அவ சித்தாந்தங்களையும், சீவகாருண்ணிய தருமவிரோதமாகும் அதர்மங்களையும், அங்ஙனம் சமயப் பொருளாகக் கொண்டுரைத்துத் தோஷப்படுவன வாயின.

சமய வேறுபாடுடைய மனிதர்களுள்ளே மேற்சமயிகள் கீழ்ச் சமயிகளை இளையசகோதரர்களாகவும், கீழ்ச்சமயிகள் மேற்சமயிகளை மூத்தசகோதரர்களாகவும் மதித்து, ஒருவர்க்கொருவர் அன்பு செய்தொழுகலே விவேக நெறியாம். சமய தாரதம்மியவகை சமயிகளுக்கு அறிவொற்றுமைக்குக் காரணமாவதன்றிக் கலக காரணமாகமாட்டாது. ஒரு பெரிய கலாசாலையில் கற்கும் மாணுக்கர்கள் அறிவு விளக்கத்தின் தாரதம்மியத்தினுல் மேல் கீழாகப் பேதப்பட்டிருக்கக் காண்கின்ருேம். அப்படிப் பேதப்பட்டிருக்கும் மாணுக்கர்களுள் மேல் வகுப்பு மாணுக்கர்கள் தங் கீழ் வகுப்பு மாணுக்கர்களைக் குறித்து இவர்கள் மேல் வகுப்பில் வந்து நுட்பக்கலை கற்குஞ் செவ்வி என்று கூடுமோ வென்று அவர் ஆக்கங் கருதி அநுகூலங்கள் செய்தலை ஒழுக்க நெறியாகக் கொள்வர். கீழ் வகுப்பு மாணுக்கர்கள் மேல்வகுப்பு மாணுக்கர்களைக் குறித்து இவர் விசேட அறிவு விளக்கம்பெற்ற பெருமையினுலன்ருே மேல் வகுப்பிற் பிரவேசிக்கப்பெற்று நுட்ப வித்தைகளைக் கற்றற்கு அதிகாரிகளாயினர். நாங்களும் அறிவுவிளக்கம் விரைவிற் பெற்று மேல் வகுப்பினை அடைந்து அந்த வியாபக நுட்ப வித்தைகளைக்கற்கும் அதிகாரத்தினை இவர்போல் எய்தல் வேண்டுமென்று கருதி முயலுதலை ஒழுக்க நெறியாகக்கொள்வர். அம் மேல் கீழ் என்னுந் தாரதம்மியவகை அவர்கள் அறிவொற்றுமைக்கே காரணம் ஆதலல்லது கலககாரணம் ஆகுதல் இல்லை. இந்த முறையினுல், மேற்சம

யிகள் கீழ்ச்சமயிகளைக் குறித்து இவர்கள் ஞானவிளக்கம் உண்டாகி எம்மைப்போல மேற் சமயப்படி ஏறி உய்யுங் காலம் என்று சித்திக்குமோவென்று இரங்கி அவர்கள் ஆக்கங்கருதி வேண்டும் அநுகூலங்கள் செய்து வருதலும், கீழ்ச்சமயிகள் மேற்சமயிகளைக் குறித்து இவர் தவத்தின் வலியினாலன்றோ மேலான சன்மார்க்கம் எய்திக் கருமஞான சித்திகளில் எம்மினும் மேம்பாடுடையராயினர்; நாங்களும் தவ முயற்சியினால் அம்மேற்சமயஞ் சார்ந்து கருமஞான சித்திகள் அவர்போலப் பெரிதாக எய்தல் வேண்டுமென்று ஏக்கற்று முயலுதலுமே, அறநெறியாம். இப்படிச் செய்தலைவிட்டு, மேற்சமயிகள் கீழ்ச்சமயப் பொய்ம்மைகளை அச்சமயிகளுக்குமுன் எடுத்துப்பேசி இகழ்ச்சிசெய்து அவர்களுக்குக் கோபமூட்டிக் கலகம் விளைத்தலும், கீழ்ச்சமயிகள் மேற்சமயப் பொருள்கள் தாம் கிரகிக்கக்கூடாத நுட்பமும் தஞ்சமயங்களில் இல்லாத நூதனங்களுமாயிருத்தல் காரணமாக அம்மேற் சமயங்களை மனம்போனபடி தூஷித்து அம்மேற் சமயிகளுக்கு மனவருத்தம் உண்டாக்கிக் கலாம் விளைத்தலும், ஒழுக்க நெறியாகமாட்டாவாம். இன்னும், மேற்சமயிகள் கீழ்ச்சமயிகளுக்கு அவர் சார்ந்து நிற்குஞ் சமயப் பொய்ம்மைகாட்டி அவரை மேலாயுள்ள தஞ்சமயங்களில் வழிப்படுத்தி உய்யச்செய்யுங் கருத்துடையராங்கால், அவரோடு உலகியல் ஒழுக்க வழியால் அன்பு செய்து கலந்து நட்புடையராய்ப்பொதுநிலை நின்று நியாய நெறியால் சமய சம்பாஷணம் மெல்ல மெல்லச் செய்து சமயப்பொய் மெய்களை உள்ளபடி அவர் தெளிய விவேகச் சுடரை அவர்க்குக் கொளுத்தி அப்படிச் செய்தலே புத்தியாம். கீழ்ச் சமயிகள் அங்ஙனஞ் சமய சம்பாஷணத்தினால் தங்களிடத்து உதித்துப் பிரகாசிக்கும் விவேகக் கண்களால் தங்கள் சமயப் பொய்ம்மையும் மேற் சமய மெய்ம்மையும் உள்ளபடி காணப்பெறுங்கால், தஞ்சமயப் பற்று விடுத்து தாம் மெய்யெனக்கண்ட மேற்சமயஞ் சார்ந்து உய்ய முயலுதலே அறிவாம். இனி அப்படி உண்மை கண்டபின்னும், துரபிமானத்தினால் மேற்சமயம் பற்றி உய்ய முயலாமல் தாஞ்சார்ந்து நிற்குஞ் சமயங்களே சன்மார்க்கங்களென்று மனச்சான்றுக்கு விரோதமாகப் பொய்ப் பாராட்டுச் செய்து மேற்சமயங்களை அவமதித்துக் கபடவொழுக்கம் பூணுதல் பாவமாம். இது இங்ஙனம் நிற்க. சத்தியமிக்க மேற்சமயிகள் சத்தியங்குறைந்த கீழ்ச்சமயங்களைப் பற்ற ஒருகாலும் சம்மதியார்,

ஆரியர்களாகிய வைதிக மேற்சமயிகள் இக்கலியுகத்திற் சிலர் கொண்டு அனுஷ்டிக்கும் அநாரியமாகிய விவிலிய சம்பந்தமான கீழ்ச்சமயங்களிற் பிரவேசித்துக் கெடக்காண்கின்றோம். பிரகிருத சம்பந்தம்பற்றி அக் கெடுதியைச்சுட்டிச் சிலசொல்வாம். ஆரியர்கள் சமய நூல்களாகக் கொண்ட வேதாகமம் முதலிய சாஸ்திரங்கள் சித்தசுத்தியைத்தரும் விதி விலக்கு நிறைவும், தர்க்கமுதலிய கலைஞான சம்மதமும், பதி, பசு, பாச பதார்த்த விசார பூரணமும், தத்துவஞான சித்தி சாதன பூரணமும், சகல புருஷ பக்குவானுகூல தரும ஞானசித்தி சாதனோபாய பூரணமும், சமஸ்த ஜீவகாருண்ணிய நீதிமார்க்க பூரணமும் உடையன. அநாரியர் சமய நூலாகக்கொண்ட விவிலியம் முதலிய நூல்கள் சித்த சுத்தியைத்தரும் விதி விலக்குக் குறைவும், தர்க்கம் முதலிய கலைஞான விரோதமும், ஜீவேசுர ஜகத்பதார்த்த விசாரக்குறைவும், தத்துவ ஞானசித்தி சாதனக்குறைவும், ஏகதேச புருஷாநுகூல கரும சாதனோ பாயமும், மனிதஜாதி மாத்திரமான ஜீவகாருண்ணிய நீதிமார்க்கமும் உடையன. இந்த முறைமைகளால் ஆரிய சமயங்களும் அநாரிய சமயங்களும் தம்முள்ளே வித்தியாசம் அதிகம் உடையவைகளென்பது பிரசித்தம்.

வைதிக சமயிகள் தங்கள் சமயக்கொள்கைகளோடு இங்ஙனம் வித்தியாசம் பெரிதுடையனவாய் மிகவுங் கீழ்ப்பட்டிருக்கும் விவிலிய சமயங்களை நல்லனவென்று பற்றுதற்கு நியாயம் சிறிதுஞ் சித்திக்காது. இனி ஆரிய சமயிகளிற் சிற்சிலர் இக்காலத்தில் கீழான விவிலிய சமயங்களிற் பிரவேசித்தற்குக் காரணம், வைதிக சமய விதி விலக்குக்களாகிய தருமங்கள் அநுஷ்டித்தற்கு அரிய பண்டிதக் கொள்கையாதலும், விவிலிய சமயக் கொள்கைகள் அநுஷ்டித்தற்கு எளிய பாமரக் கொள்கைகளாதலும், மனம்போகுமாறுபோய் இச்சாபோகங்களை அநுபவித்தற்கு அநுகூலமாயிருத்தலுமேயாம். அநித்தியமும், துக்கமும், இழிவும், பழியுமுள்ள பொய்ப் போகங்களை அநுபவித்தற் பொருட்டு நித்தியமும், சுகமும், உயர்வும், புகழுமுள்ள வைதிகசமயங்களைக்கைவிட எண்ணுதல் அந்தோ! மேன்மக்களாகிய ஆரியர்களுக்கு எவ்வளவு மதிகேடு!! எவ்வளவு அவமதிப்பு!! எவ்வளவு பழி!! எவ்வளவு பாவமாம்!! வைதிக சமயிகளுள்ளே வேறு சிலர் தரித்திரக் கொடுமையினுல் அன்னவஸ்திரம் பெற்று உடல் ஓம்பும் பொருட்டும்

விவிலிய சமயங்களிற் பிரவேசிக்கின்றூர். தொழின் முயற்சிக் குறைவினல் தரித்திரம் உண்டாகும். தொழின் முயற்சி செய்து பொருளை ஈட்டின், அதுகெடும்; செல்வ வாழ்வு உண்டாம். இதற்குப் பயந்து சாதியாசாரம் சமயாசாரம் விட்டுக் கீழான புன்சமயங்களிற் பிரவேசித்துப் பழிபூணல் பெரியதோர் மதிகேடு! இப்படி மதிகெட்டு விவிலிய சமயங்களிற் பிரவேசித்துப் பதிதத் தன்மை எய்தினவர்களுள்ளே ஒரு சிலர், போகவாசையும் பொருளாசையும் அநுபவத்தினலும் பொருட்பேற்றினலும் நீங்க, மோகந்தெளிந்து அறிவு வரப் பெற்ற பின் ஆரிய மேன்மக்கட்பேற்றினையும், வைதிக சற்சமயப் பேற்றினையும், நல்வினையாற் பெற்றிருந்த நாம் ஐயோ! அற்ப துராசை தரித்திரங் காரணமாக மயங்கி அறிவுகெட்டு அப்பேறுகளைக் கைவிட்டு, இந்த இழிந்த சமயங்களில் வீழ்ந்து குலங்கெட்டோம்! குணங்கெட்டோம்! நலங்கெட்டோம்! நற்சமயங் கெட்டோம்! என்று பச்சாத்தாபப்படுகின்றூர். இவர்களுள்ளே சிலர் தங்கள் முன்னைச் சமயங்களைச் சாரக்கருதி முயன்றவழியும், வைதிகசமயிகள் சாதிகெட்டுச் சமயங்கெட்டு நீதிகெட்டு நிலை குலைந்து பதிதரான நீங்கள் எங்களோடு சேரவொட்டோம் என்று ஒதுக்க, என் செய்வோம்! தெய்வமே! இதுவும் படக்கடவமோ! என்று கவலைக்கடலுள் மூழ்குகின்றூர். இவருள்ளே சிலர், உலகறிய விவிலிய சமய கண்டனஞ்செய்து ஆரியர் அயிர்க்காமல் விவிலிய சமய வேடம் பெயர் மாற்றி ஆரிய சமய வேடம் பெயர் தரித்து ஆரிய நடை மேற்கொண்டு ஒழுகுகின்றூர்கள். அப்படித் துணிந்து முற்சமயப் படியேறி வாழ்பவரை ஆரிய சமயிகள் அவர் இடை வழுக்குற்றெய்திய இழிவையெண்ணிச் சமய கருமங்களில் ஒரு புறமாகக் கொள்கின்றனர். அறியாமையினல் அரிய சமய தரும நஷ்டமுற்றோர் அந்நஷ்டத்தினை நினைந்து பச்சாத்தாபப்படுவரேல், பிராயச்சித்த சற் கருமத்தினல் அவர் பாவங் கழுவி உய்தி கூட, விதிவிலக்கு வாக்கியஞ் செய்த தரும சாஸ்திரகாரராகிய வைதிகாசாரியர்கள், ஒரு வழி விட்டார்களில்லை போலும்! காலத்துக்கேற்பச் சீலம் போற்றல் அறிந்தார் கடனுதலால், இக்காலத்து நமது வைதிகாசாரியர்கள் அத்தன்மையோர் சுத்தி பெற்று ஆரியராய் வேறிருந்து சமயம் பேணி உய்தற்கோர் நல்வழியைத் தரும சாஸ்திர சம்மதமாக இக்காலத்துக் கேற்ப உலகறிய விதித்தல் நலமாம். தம்பந்துக்களாகிய

ஆரிய மாதராடவர்கள் தரும நெறியில் பிழைத்தால், இரகசியமாக அவர் பாவநீங்கிச் சாதியில் இருந்துவாழப் பிராயச்சித்த உபாயத்தால் சுத்தி செய்யும் ஒழுகலாறுகள், அங்கங்கே வைதிகாசிரியர்களால் வர்த்தமானத்திலும் அனுஷ்டிக்கப்படக் காண்கின்றோம். அவ்வாறே இச்சமய தரும நஷ்டமடைந்தார்க்கும் ஓர் உபாய சுத்தியை விதித்தல் அவர்க்குக் கடப்பாடாம். அச்செய்தி அவர்க்குப் புகழ்ச்சியாமே யன்றி, இகழ்ச்சியாகமாட்டாது. முற்காலத்தும், ஆரிய சமய உண்மை தேறாமல் ஆருகதம் முதலிய அவைதிக சமயங்களைச் சற்சமயங்க ளென்று விபரீதமாகக் கொண்டு இழவூழ் வலியால் அவற்றிற்புகுந்த ஆரியோத்தமர்கள் சிலர், பின்னர் ஆகூழ் உற்றுழி உதவ அச்சமயங் களின் பொய்மை கண்டு, தம்முன்னைச் சமயத்துண்மை தேறிக், கட வுள் அருளாலும் கடவுள் அருள் பெற்ற ஆசாரியர்கள் அருளாலும் அவைபற்றி உயர்ந்து, வைதிகர்களாய் மேம்பாடு பெரிதும் எய்தினார்க ளென்று, புராணங்களும் அறிவுறுத்தும். இனித் தஞ்சமய வுண்மை தேறப்பெறாது தீயூழ் வசத்தினால் ஆருகதம் முதலிய அவைதிக சமயங் களிற் பிரவேசித்த நல்லோர்க்கும், துராசை தரித்திரம் காரணமாக அநாரியமான விவிலிய சமயங்களிற் பிரவேசிக்கின்றவர்க்கும், வேற் றுமை பெரிது. அவர் தஞ்சமயவுண்மைதேறாது நன்னெறி கடைப் பிடித்து உய்தல் வேண்டுமென்னுங் கருத்துடையராய்க், கொல்லாமை, புலாலுண்ணாமை யென்னுங் கபடசீலம் பெரிதுடைமையேபற்றி, அந்த அவைதிக சமயங்களை நன்னெறிகளென்று மயங்கிக் கைக்கொண்டவர். இவர்கள், நிலையாத பழிபடு போகத்தினையும் இழியுடலோம்புதலை யும் பொருளாகக் கருதி, நிலையுள்ள புகழ் இன்பம் பயக்குஞ் சற்சமயத் தினைக் கைவிடுகின்றவர்கள். அவர் புகுந்த சமயங்கள், கொலை, புலா லுணல், கள்ளுணல் என்னும் பெரும் பாவங்களை விலக்குவன வாத லால், சமயநலங் கெட்டாரன்றிக் குலநலங் கெட்டிலர். இவர்கள் புகும் சமயங்கள், கொலை, புலாலுணல், கள்ளருந்தல் என்னும் பெரும் பாவங்களைத் தருமமாக விதிப்பனவாதலால், சமயநலக் கேட்டுடன் குலநலக்கேடும் எய்துகின்றார்கள். அன்றியும், அவர் தெய்வத் திரு வருள் கைவந்து கிடைக்கப் பெற்று மேம்பட்டவர். இவர்கள், சிறிது விவேகம் உதிக்கப்பெற்று மேலே வரக் கருதுகின்றவர். ஆதலால், இருவர்க்கும் வேற்றுமை பெரிதுண்டென்றறிக. கீழ்ச் சமயத்தில்

இறங்கி முன்னை மேற் சமயத்தில் வருதல் மாத்திரைக்கே அப்பெரியோரை இவர்க்குத் திருஷ்டாந்தமாக உரைத்தோம்.

இனி வைதிகர்களாகிய ஆரியசமயிகள் சமயக்கொள்கை பற்றிப் பலபேதப்படினும், வருணாச்சிரம ஒழுக்க முறையில் வேறுபாடின்றி ஒத்த நடை யுள்ளவர்களாயே இருத்தலினால், அவர்களுள் தம்மேல் சமயத்தினின்றும் இழுக்கிக் கீழ்ச்சமயம் புகுந்து மேற்சமயமேற விரும்புவோர்களும், கீழ்ச் சமயிகளாய்வைகி மேற்சமயமேற விரும்புவோர்களும், விரும்பும்பொழுதே, தாங்கள்மேற்புக விரும்புஞ் சமயாசாரியர்கள்பால் அச்சமய ஸம்ஸ்காரம் பெற்றுச் சமயப்பிரவேசஞ் செய்து, வேறுபாடின்றி அம்மேற்சமயிகளோடு கலந்து, அச்சமயிகளாய் ஒழுகுதற்கு உரியர்களாவர். அவர்களுக்கு மேற்சொல்லிய சங்கடங்கள் உண்டாமாறில்லை. ஆரிய சம்பந்தமுற்றுக் கொல்லாமை, புலாலுண்ணாமை முதலிய சீலம்பேணி ஆரிய தேசத்தவர்களாய் வாழும் ஆருகதர், பௌத்தர் என்னும் அவைதிக சமயத்தார்களுக்கு இம்முறை ஒருவாறு ஒப்பற்பாலதன்றி எல்லாவற்றினாலும் ஒப்பற்பாலதன்று. அற்றாக. ஆரிய நடையோடு மாறுபட்டு அப்புறத் தேசத்தவர்களாய் வாழும் அநாரிய சமயபேதிகள் தம் விவிலியக் கொள்கைப் பொய்ம்மைகண்டு, கொலை, ஊன் உணவு, மதுஉணவு முதலிய துராசாரமறுத்து ஆரியசமய மெய்ம்மைதேறி அவற்றுள் ஒருசமயஞ் சாரவிரும்பின், அவ்வழி அவர்க்குச் செய்யற்பாலது யாதெனின், உண்மையில் பாஷை சாதிபற்றிப் பேசும் விகற்பம் ஈசுரன் சந்நிதிக்கு மிக்கதூரமென்று உண்மைநூல் கூறுதலால், பக்குவமுடையராகும் அவர்க்கும் ஒருவகை ஸம்ஸ்காரஞ்செய்து ஆரியசமயத்தராக்கி உய்யக்கோடலே கிருபைமிக்க ஆரிய வைதிக சமயாசாரியர்களுக்குக் கடப்பாடாம். அங்ஙனம் சமய ஸம்ஸ்காரம்பெற்று ஆரிய சமயத்தினராய் உயரும் அந்த விவேக புருஷர்கள், ஆரிய சமயம் வழுக்கி விவிலிய சமயம் வீழ்ந்து அவற்றின் பொய்ம்மைகண்டு முன்னைத் தங்கள் ஆரிய சமயஞ் சார விரும்புவார்போல், ஒருபுறமாக வைகிச் சமயவொழுக்கம் பேணுதற்குரியராவர்.

இனிச்சமயங்கள் காலபேதத்தினால் விருத்தியெய்தியும் குன்றியும் வரும். சமயிகள் செய்துபோதரும் தரும விர்த்தியும் அதர்ம

விர்த்தியும் முறையே, அவ்விரண்டுக்குங் காரணமாம். அங்ஙனம் ஆக்கக்கேடுகள் எய்தினும் மேற்சமயம் மேற்சமயமே; கீழ்ச்சமயம் கீழ்ச்சமயமே. அசற்சமயங்கள் சமயிகளுக்கு அரசு செல்லுங்கால் விருத்தியெய்தியும் அரசு செல்லாக்கால் குன்றியும் வரும். சற்சமயங்கள் இரண்டு காலத்தும் தன்மை சிறிதும் குன்றாது ஒரு பெற்றியாகவே நின்று விளங்கும். நல்லறிவில்லாத மக்கள், அரசோடுகூடி ஆக்கமடையுஞ் சமயங்கள் நியாயபலம் இல்லாதவைகளாயினும், நியாயபலமுடையனவென்று அவைகளைப் பாராட்டாநிற்பர். விவேகிகள் அதுபற்றி அங்ஙனம் பாராட்டல் செய்ய இசையார். என்னை? "இருவேறு உலகத்தியற்கை, திருவேறு, தெள்ளியராதலும் வேறு," "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருண் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்னும் உண்மைபற்றித் தீயோர் ஆக்கமும் நல்லோர் நல்குரவுங்கண்டுழி, செல்வ ஏது வேறு ஞானஏது வேறு என்று வேறுபாடு செய்தும், ஒரு பொருளினை அதன் ஸ்தடத்தப் பொலிவுபற்றி மயங்கி வேறுபடவுணராமல் மெய்யாய் நின்ற சொரூபம்பற்றி ஆராய்ந்தும், உண்மைதேற வல்லராதலாலென்க.

இனி வேதாகமபுராண இதிகாசம் முதலிய சமயசாஸ்திரங்களாலும் தர்க்கம் முதலிய பல கலைநூல்களாலும் நிறுத்தப்பட்டு மிகமேலாகி விளக்கமுற்றுவரும் நமது வைதிகசமயங்கள், ஆரியராகிய நம்மனோர் வேதாகமபுராண இதிகாசம் முதலிய சமய சாஸ்திரங்களையும் தருக்கம் முதலிய கலை நூல்களையும் பிரீதியோடு கல்லாமையினாலும், எங்கேனுஞ் சிலர் கற்றாலும் பிறர்க்குக் கற்பித்தலும் எல்லாரும் எளிதில் அறிந்துய்யத் தெளிவாகப் பிரசங்கித்தலுஞ் செய்யாமையினாலும், இக்காலத்தில் வரவரக் குன்றுகின்றன! பகற் பொழுதெல்லாம் பாநுவின் கிரணப்பரப்புள் அடங்கி ஒளிகுன்றி ஒடுங்குந் தாரகாகணங்கள், அப்பாநுவின் கிரண விளக்கங் குறையும் இராப்பொழுதில் வெளிவந்து விளங்கி வீக்கம் பெரிது காட்டுதல்போல, முன்னெல்லாம் வைதிக பாநுவின் பெரிய ஞானப் பிரகாசத்துள் அடங்கி வலிகெட்டு ஒடுங்கிக் கிடந்த பரசமயகணங்கள் வைதிகசமயங்கள் விளக்கங் குறையும் அற்றநோக்கி இக்காலத்து வெளிவந்து தலையெடுப்புற்று வீக்கங்காட்டுகின்றன! அதுமட்டோ! பெருவலியுடைய மிருகவேந்தாகிய சிங்கம் அருவரை முழையில் அடங்கி ஒடுங்கியிருக்கும் வலிமிக்க ஒடுக்கத்

திணைக்கண்ட மரையும் மானுங் கேழலும் வேழமும், வலியில்லாத ஒடுக்கமென்று விபரீத சிந்தனைசெய்து, 'இதனோடு பொருதுவென்றியெய்துவமென்று குறித்துப்பகைத்து எதிரேறுதல்போலக் காலங் கருதியிருக்கும் வைதிக சமயங்களின் சூழ்ச்சி பொருந்திய மாட்சிமையொடுக்கத்தைக்கண்ட பரசமயகணங்கள், வலியில் ஒடுக்கமென்று விபரீதசிந்தனைசெய்து, 'இவற்றோடு பகைத்துப் பொருது வென்றியெய்துவம், என்று குறித்துத்தருக்கிச் சொற்போர்புரிய முற்படுகின்றன! இனி அரண்வலி மிகவுடைத்தேனும், அதன் அகத்திருக்கும் வீரர் மனவலி குன்றிச் சாம்பின், அது வலி அழிவெய்தும். அரண்வலி மிகவுடைத் தன்றேனும், அதன் அகத்துஇருக்கும் வீரர் மனவலியுற்று முயலின், அது வலிமிகவுற்று நிலைபெறும். அதுபோல, நமது வைதிக சமயங்கள் எல்லா நலமும் எல்லா வலியுமுடையனவேனும், வைதிகர்களாகிய நம்மனோர், வைதிக சமய சாஸ்திரங்களையும் தருக்கம் முதலிய கலைநூல்களையும் பிரீதியோடு கற்றும், பிறர்க்குக் கற்பித்தும், எல்லாரும் எளிதில் அறிந்துய்யப் பிரசங்கித்தும், சமய விர்த்தி செய்யாமல் சோம்புற்றிருப்பின், மெய்விளக்கங் குன்றுவனவாம். அசற்சமயங்கள் நலமும் வலியும் இல்லனவேனும், அச்சமயிகள் அச்சமய நூல்களைப் பிரீதியோடு கற்றும் கற்பித்தும் பிரசங்கித்தும் ஊக்கத்தோடு சமயாபிவிர்த்தி செய்துவரின், மெய்ம்மையுடையனபோல் விளக்க முறுவனவாம். இங்ஙனமாகலின், வைதிகசமயங்களின் விளக்கக் குறைவு அவற்றின் வலிக்குறைவால் நேர்வதன்று; சமயிகள் முயற்சிக்குறைவாற்றானே நேர்வதாமென்றும், அசற்சமயங்களின் விளக்கம் அவற்றின் பொருள் வலியால் நேர்வதன்று, சமயிகள் முயற்சியினால் நேர்வதேயாமென்றும் உணர்க. இனி நம்முயிர்க்கு உறுதி தரும்பொருட்டுப் பெருங்கருணைத் தடங்கடலாகிய முதற்கடவுள் நிறுத்திய வைதிக அருட்பெருஞ் சமயங்கள் விளக்கங் குன்றாமல் அவைகளைப் பிரதிஷ்டை செய்தல் நாமெல்லாம் அத்தியாவசியகஞ் செயற்பாலதாம் பரம புண்ணியமாம். இனி வைதிகர்களாகிய நாம் அத்தியாவசியகம் செயற்பாலனவாகும் சமய ஸ்தாபன கருமங்களாவன: வைதிக சமயநூல்களையுந் தருக்கம் முதலிய கலை நூல்களையும் நன்றாகக் கற்றல், கற்பித்தல், பிரசங்கித்தல், இலக்கண அமைவும் நியாயபலமும் பொருந்த வைதிக ஸ்தாபன கிரந்தங்கள் பரசமய கண்டன கிரந்தங்கள் இக்

காலத்துக் கேற்பச்செய்தல், பழைய வைதிக சமயஸ்தாபன கிரந்தங்களும் பிறவும் இறந்துபோகாமல் பாதுகாத்தல் முதலியனவேயாம்.

மிடிகாரணமாக அல்லது பகை காரணமாகத் தங் குடிகெட வந்தவிடத்து, அம்மிடி பகைகளைத் தீர்த்துக்குடியை யோம்புதல், அக்குடிப் பிறந்த நன்மக்களுக்குக் கடனும்; அதுபோலவே சமய நூல் அறிவு பேணுமை காரணமாக அல்லது பரசமய வாதிகள் வாதப்போர் காரணமாகத் தஞ்சமயங்குன்ற வந்தவிடத்து, சமய நூல் அறிவை அபிவிருத்திசெய்தும் பரசமய கண்டனஞ் செய்தும் தஞ்சமயத்தை யோம்புதல், அச்சமயத்துப் பிறந்த விவேகபுருஷர்களுக்குக் கடனுமன்றோ? இனிக் குலத்தைக் காப்பாரைக் குலத்தாரே தெய்வமாகக் கொண்டு வழிபடுவர்; சமயத்தைக் காப்பாரைச் சமயத்தர் எல்லாரும் தெய்வமாகக்கொண்டு வழிபடா நிற்பர். குலங் காப்பவர்புகழ் குலமுள்ளவரையும் நிற்கும்; சமயங் காப்பவர்புகழ் உலகமுள்ளவரையும் நிற்கும். இவர்க்கு உண்டாகும் இம்மைப்பயன் அளவு இவ்வளவாயின் மறுப்மைப்பயன் அளவு சொல்லி முடியுமோ?

இன்னும், இவ்வுலகத்திலே மாநுடர் ஒவ்வோர் தொடர்ச்சி பற்றிச்செய்து போதரும் அபிமானங்கள் சாதியபிமானம், தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானமெனப் பலவகைப்படும். அவற்றுள், சாதியபிமானத்தினை நோக்கத் தேசாபிமானம் உயர்ந்தது. தேசாபிமானத்தினை நோக்கப் பாஷாபிமானம் உயர்ந்தது. பாஷாபிமானத்தினை நோக்கச் சமயாபிமானம் உயர்ந்தது. சாதியபிமானம் தேசாபிமானம் பாஷாபிமானங்கள் உயிர்க்குப் புறம்பாயுள்ள ஒவ்வோர் பொருள்பற்றி உயிர்களிடத்து நிகழுங் குணங்களாம். சமயாபிமானம் உயிர்க்குயிராகிய கடவுள் சம்பந்தங் காரணமாக உயிர்களிடத்து விளங்கும் ஞானகுணமாம். ஆதலால், மனிதர் மற்றை அபிமானங்களினும் சமயாபிமானத்தினையே அதிக சிரத்தையோடும் பெரிதுபோற்றி ஒழுகுதல் வேண்டும். இனித்தஞ்சமயங் குன்றவருமிடத்து அது அபிவிர்த்தி எய்துதற்கு வேண்டும் முயற்சிகள் செய்யாது சும்மா விருந்துகொண்டு நாம் சமயாபிமானம் பெரிதுடையோமென்று வாயால் வெறுஞ் சொற்பிதற்றித் தம்மைத் தாமே மதித்து இறுமாப்படையும் வெறுஞ் செம்மாப்பு நாடகமாமன்றிச் சமயாபிமானம் ஆகாது. சமயப் பிரதிஷ்டை

ஏனைப் பிரதிஷ்டைகளின் மேம்பாடுடைய தென்பது, சாதிப்பிர திஷ்டை தேசப்பிரதிஷ்டை பாஷைப்பிரதிஷ்டை செய்த மேலோர் களை நோக்கச் சமயப்பிரதிஷ்டை செய்த மேலோர்களைப்பிரித்து மிக மேலோர்களாக வைத்து வழிபடும் உலக அநுஷ்டானத்தினாலும் இனிது விளங்கும்.

இன்னும், சமய வழி நின்று தம்மை வழிபட்டு உய்தற்கே பக் குவமிக்க உயிர்களுக்கு அருமையான மாநுடப்பிறவி கடவுளாற் கொடுக்கப்படுவதாம். அவ்வருமையான மாநுடப்பிறப்பினை எய்திய மனிதர் சமய வழிநின்று தெய்வம் வழிபட்டு இருமை இன்பமும் பெற் றுய்தற்கு வாய்ப்புடைய கருவியாகும் அதனைத் துர்விநியோகஞ் செய் வாராயின், அப்பிறப்பு அவர் தமக்குப் பயன்படாமல் கொன்னே கழிந்து அழிவெய்துவதாகும். இனி அப்பிறப்புப் பின்னர் எய்தலோ மிக அரிது. ஆதலால், கடவுள் அருளால் அரிய மக்கட் பிறப்பெய்திய புருஷர் அப்பிறப்புத் தமக்குப் பயன்படும்பொருட்டுக் கடவுள் தமக்கு அருளிய சமயங்குன்றுமல் அதனைப் பெரிது போற்றி நின்று அதன் வழிநடந்து அவர் அருளால் இருமை இன்பம் எய்த முயலுதலே விவேகமாம். இனிச் சமயநடை விரும்பாது பிராகிருத நடை மேற் கொண்டு ஜீவிக்கும் மனிதர் பிறப்பால் மக்கள்போலக் காணப்படி னும், தம்முயிர்க்கு உறுதி பேணுமையால், தம்முயிர்க்கு உறுதி பேணும் விவேக முயற்சியில்லா மிருகங்களோடு ஒப்ப மதிக்கப்படுவ ரன்றிப் புகழுடைய மக்களாக மதிக்கப்படமாட்டார்.

இனிச்சமயநெறி சாராது நாஸ்திகம்பேசி உலக வாழ்வினையே பொருளாகக்கொண்டு ஒழுகும் மக்களுஞ் சிற்சிலர் உலகத்துளராக வின், மக்கட்பிறப்புச் சமயஞ் சார்ந்து அநுஷ்டித்துத் தத்துவஞான மெய்தி வீட்டின்பம் அடைதற்குச் சாதனமாகக் கடவுளாற் கொடுக்கப் படுவதென்பது பொருந்துமாறு எப்படியெனின், அது பொருந்துமாறு சொல்லுதும்:—நாஸ்திகம் பேசி உலகமே பொருளாகக்கொண்டு வாழும் மக்களும் சமயஞ் சார்ந்து நிற்கும் மக்களென்றே கொள்ளப் படுவர். பதி, பசு, பாச பதார்த்தசொரூபம் தெரியமாட்டாது நாஸ் திகம் பேசுதல் மாத்திரையால் அவரைச் சமயஞ் சார்ந்து நிற்கும் மாந்தரல்லரென்று கொள்ளுதல் அடாது. என்னை? அவர் காட்சி

யென்னும் பிரமாணமும், ஸ்தூல பூதக் கடவுட் பதார்த்தமும், அப் பூதக்கூட்ட விகாரமாகிய ஜீவான்ம பதார்த்தமும், பூத காரியமாகிய பல தாத்துவிக பதார்த்தங்களும், ஜீவாத்ம இம்மைப் பந்தமுத்திச் சிறுகொள்கையும், இவ்வுலக இன்பசாதனமாகும் லௌகிக தரும அநுஷ்டானங்களும், மெய்யென்று சமயங்கொண்டு அநுஷ்டிப்பர். அவர் கொள்கை உலகாயத சமயமெனப்படும். உலகாயதம் இகபோகங் களிற் கழிபெரும் பற்றுடைய பிராகிருதர்பொருட்டு வேண்டப்பட்டுச் சமயசோபானவரிசையில் முதற் சிறுசோபானமாக நிறுத்தப்பட்ட தொருசமயம். இனி மனிதர்கள் இகபோகவாசை மிகவுடையராங்கால் உலகாயத சமய நிலையுடையராயும், இகபோக வைராக்கிய முதிக்கப் பெற்றுப் பாரமார்த்திக ஒழுக்க விருப்பமிகவுடையராங்கால் உலகாயத சமயத்தரல்லராய் மேற்சொல்லிய சமயவேறுபாடுகளுள் ஏற்பதொரு சமய நிலையுடையராயும் இருப்பர். ஆதலால், மக்களுக்கு உலகாயத சமயவொழுக்கம் மற்றைச் சமய ஒழுக்கம்போல ஒரு நிலையுள்ள சமய வொழுக்கமாக மாட்டாது. இச்சமயவொழுக்கம் பெரும்பான்மையாகப் புறப்புறச் சமய வகுப்பார்களிடத்துப் புத்தி சலனங் காரணமாக நிகழ்வ தொரு ஞானபாச குண வியாபாரமாதலால், அது அந்தப் பிராகிருத சாமானிய சமயங்களின் ஆபாசமாய் அவற்றின் இறுதிக்கண் வைத்து எண்ணப்படும். இந்த நியாயங்களால், அந்த நாஸ்திகவாதிகளும் சம யச் சார்புடையவர்களே யென்றும், அதனால் மனிதப் பிறப்புச் சமய அநுஷ்டானம்பேணி உய்தற்பொருட்டே அறிவு விசேடமுடைய உயிர்களுக்குக் கடவுளாற் கொடுக்கப் படுவதொரு உயர் பிறப்பென் பது பொருத்த முடைத்தென்றும், சமயச் சார்பில்லா மாந்தர் உலகத் தில் அரியரென்றும் ஒருதலையாக அறிக. இனிப் புத்தர், ஆருகதர், சாங் கியர், மீமாஞ்சகரும் பிறரும், நித்தியாநித்திய பதார்த்த இலக்கணங் களும், பந்தமுத்தி கலைக்கணங்களும் உண்மையாக அறியமாட்டாத நாஸ்திகர்களேயாயினும், அவரெல்லாம் நான்கு பூதங்களுக்கு மேலா கச் சூக்கும பதார்த்தங்கள் உண்டென்று நிச்சயிக்க வல்லராதலாலும், உலகாயதர் நான்கு பூதங்களுக்கு மேலாகச் சூக்கும பதார்த்தம் உண் டென்று நிச்சயிக்க வல்லரல்லராதலாலும் அறிவுடையோர் உலகாய தரையே நாஸ்திகரென்று பெரும்பான்மைபட வழங்குவாராயின ரென்று உணர்க.

இனி இக்காலத்தில் வேதசமாசத்தார் பிரமசமாசத்தார் என ஆரியர் சிற்சிலர்தோன்றித் தாம் தாம் யுக்தியினாற் புதிதாகச் சில

கொள்கைகள் கற்பித்து, வைதிக சமயக் கொள்கைகளோடு அவைகளைக் கலந்து புதியசமயங்கள் சில உண்டாக்கி, அவைகள் வைதிக சித்தாந்தங்களாகுமென்று, அங்கங்கே நாட்ட முயல்கின்றார். அப்புதுச் சமயங்கள் யுக்திகளென்று கற்பித்துக்கூறுங் கொள்கைகள், அங்காங்கி பாவமும் ஐக்கிய பாவமும் உடைய வைதிக கருமகாண்ட ஞானகாண்ட அநுஷ்டானங்கள் தம்முள் ஒன்றற்கொன்று ஐக்கியம் இல்லாதனவென்று மாறுபட அந்தச்சித்திரம் விளைத்தலாலும், ஞானங்கமான கர்ம நஷ்டமுண்டாக்கலாலும், ஞானப்போலியைத் தத்துவஞானமென்று சொல்லுதலாலும், புறப்புறச்சமயச் சார்பாயுள்ள அநாரிய விவிலிய சமயக் கலப்புடையவைகளாய் இருத்தலாலும், அச்சமய ஸ்தாபனங்கள் ஆரிய வைதிக சமய ஸ்தாபனங்கள் ஆகமாட்டா. ஆதலால், வைதிக மேன்மக்கள் ஆராய்ச்சியின்றித் தஞ்சமய நிலைவிட்டுச் சடுதியில் அவற்றிற் பிரவேசித்தல் புத்தியாகாது. இன்னும், இக்காலத்துப் பரதகண்டத்தப்புறத்தநாரியர் சிலர் தமது விவிலிய சமயங்களின் பொய்ம்மை தேறி அவைகளை மறுத்து நீக்கிவிட்டு, அவைதிக புத்த சமயக்கொள்கைகளை வைதிக பாதஞ்சல வியாச சித்தாந்தங்களோடு கலந்து, புதுச்சமயம் ஒன்றுகட்டி அங்கங்கே போதிக்கின்றனர். அநாரியராகிய அவர்தம் விவிலியசமயப் பொய்ம்மை தெளிந்து ஆரிய சமயங்களைக் கடைப்பிடித்து அவை நல்லனவென்று போதிக்கத்தலைப்பட்டது வியக்கற்பாலதொரு விவேகமுயற்சியேயாம். ஆயினும், அந்த அநாரிய விவேகபுருஷர்கள் அறியாமையினால் அவைதிக சமயமான புத்த சமய சித்தாந்தங்களையும் வைதிக பாதஞ்சல வியாச சித்தாந்தங்களையும் ஒன்றெனக்கொண்டு போதிக்கின்றனர். அதனால், அவைதிக சமய சாங்கரிய முற்றுத் தோஷப்படும் அவர் வைதிக போதனையை நம்மனோர் அங்கீகாரஞ்செய்து பாராட்டுதல் தக்கதன்று. வைதிக சமய நஷ்டத்தினைத் தமக்கு விளைவிக்கும் இந்த நூதன சமயங்களை வைதிக சமயங்களென்று நம்மனோர் அங்கீகாரஞ் செய்தற்குக்காரணம் தங்கள் வைதிக சமய சாஸ்திரங்களைக் குருமுகமாக நன்குகற்று அவற்றின் உண்மைகாணப் பெறாமையேயாம். அது நிற்க.

இனி வைதிக சமயிகள் தம்முள் முரணிச் சமயவாதப் போர் செய்தல் தகுதியாகாது. வைதிக சமயிகள் ஈசுரன், ஆத்மா, ஜகம், பந்தம், முத்தி என்பனவற்றின் ஸ்தடத்த சொரூப இலக்கண விவகார வேறுபாடுகள் பற்றிப் பல்வேறு சமயப் பகுப்பினராயிருப்பினும், சைவம், ஸ்மார்த்தம், வைஷ்ணவம், மாத்துவமென்னும் நான்குபெருஞ்

சமய வரம்புட்பட்டு நடப்பர். அந்நான்குசமயங்களும் அநாதிவைதிக சித்தாந்த வித்தைகளையும் இவற்றின் வழிவந்த கலைகளையும் மூலமாகக் கொண்டு போதருவனவாம். ஆதலால், இவர்கள் தாந்தாந் தழுவிய சமயங்களின் தாரதம்மியங்களை விசாரஞ் செய்ய விரும்புங்கால், பகைவர்போல மாறுபட்டுக் கலாய்த்தலை யொழிந்து, நட்டார்போல அறிவு ஒற்றுமையுற்றுக் கலந்து பிரமாண வரைநின்று, தங்கள் சமயதாரதம்மிய விசாரஞ்செய்தலே விவேகமாம். இவ்வாறுசெய்தலையொழிந்து, ஒருவரோடு மற்றொருவர் சமயாபிமானப் பகைமேற்கொண்டு, தெய்வநிந்தை, பெரியோர்நிந்தை, சாஸ்திரநிந்தை பெரிதுஞ்செய்து பிளவுபட்டு வலியழிந்து, அவைதிக அநாரிய சமயப் பகைவர்கள் தம்முட்புகுந்து தம்முரிமைப் பெருநிதிகளை வௌவிக் கேடுகள் உண்டாக்குதற்கு ஏதுவாகும் உட்சமய கலாம் விளைத்தல் விவேகமன்று. ஒரு குடிப்பிறந்த மேன்மக்கள் தம்முள்ளே நேர்ந்த ஒரு விவகாரங்காரணமாக வாதி பிரதிவாதியென இருபகுதிப்பட்டு நியாய வாதந்தொடுப்பரேனும், விவகாரம் தமக்குஅநுகூலமாதற்கு ஏதுவாகும் மரியாதையுடைய நியாய கதியினையே தமக்குப் பற்றுக நாடிக்கொள்வர். அதுவன்றி, விகாரப் பிரதிகூலமும் உரிமை நஷ்டமும் உண்டாதலோடு பகைவர்கள் உட்புகுந்து தம்மை அடிமை கோடற்குக் காரணமாகும் மரியாதையில்லா அநியாய வாதத்தினைத் தமக்குப் பற்றுகக் கொள்ள மாட்டார்.

Q23:4(Y) N26

இனி வைதிக சமய பரிபாலன விரதம் வைதிக நாற்பெருஞ் சமயத்தாரெல்லாரும் பொதுவாக அநுஷ்டிக்கற் பாலதொரு பரம தருமமேயாம். ஆயினும், வைதிகசாஸ்திரங்களில் வல்லராய் வைதிகசமய நாயகத்தன்மை பூண்டு வாழும் வைதிகாசாரியர்களும் வித்துவான்களும் இந்த வைதிக சமய பரிபாலன விரதத்தினை மற்றையோரினுந் தமக்குப்பெருங் கடப்பாடாகவும் சிறப்பாகவுங்கொண்டு அநுஷ்டித்தல் முறையாம். வைதிக சமயபரிபாலனத்தினை இவ்வாறு கொண்டு அநுஷ்டிக்கும் வைதிகாசாரியர்களும் வித்துவான்களுமே வைதிக மகாசனங்களால் கருணைவள்ளல்களென்று போற்றி வழிபடத் தக்கவராவர்.

சமய இயற்கைபலவும் பொதுவாகத் தொகுத்து எடுத்து இங்ஙனம் உரைத்தோம். சமயங்களின் சிறப்பியல்புகளை இதன்கண் விதந்தெடுத் துரைத்திலேம். அவைகளை விரிந்த வைதிகசித்தாந்தநூல் உரைகள்பற்றித் தெரிந்துகொள்க.

சமயமுற்றிற்று

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
183793
600 008

## ௨. பரமாசாரிய சுவாமிகள் நால்வர் பிரபாவம்

சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமெஞ் சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர்த் தேசிகனு—முற்கோலி
வந்திலரே னீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரா னைந்தெழுத்தெங் கே.

முற்றுணர்வு முதலிய எண் குணங்களையும் சொரூப இலக்கணங்களாகவுடைய முழுமுதற் கடவுள் பரம காரணனான பரமசிவனாம். அத்தன்மை பொருந்தி விளங்கும் பரமசிவன் உயிர்கள் மெய் உணர்ந்து உய்ய ஆதியில் அருளிச்செய்த பூரண இயல்புடைய முதல் நூல்கள் வேத சிவாகமங்களிரண்டுமாம். இவ்விரண்டு முதனூல்களின் மெய்யான பொருளை எடுத்து இனிது போதிக்கும் ஆதிப்பூரண சன்மார்க்கம் வைதிக சைவமாம். இவ்வைதிக சைவம் வேத உப பிருங்கணங்களான புராணம், மிருதி, இதிகாசம் முதலியனவும், சிவாகமோபபிருங்கணங்களான உபாகமம் அஷ்டப் பிரகரணம் முதலியனவும், எடுத்துமிகப் புகழ்ந்து போற்ற நிலைபெறும் புராதன மார்க்கமாம். இப்பூரண அதீத சன்மார்க்கம் பரமசிவப் பிரியையான அம்பிகைப்பிராட்டி, ஐங்கரக் கடவுள், அறுமுகக் கடவுள் என்னும் சிவபுத்திரர்கள், பரமசிவ விபூதிகளான உருத்திரக் கடவுளர், திருநந்திதேவர் முதலிய சிவகணர்கள், அரியயன் இந்திரன் முதலிய தேவர்கள், அகத்தியர், உபமன்னியர் முதலிய முனிகணங்கள், இராமச்சந்திரமூர்த்தி, கண்ணபிரான் என்றிவர்கள் விதிப்படி அனுஷ்டித்து நெறிப்படுத்திய புராண மார்க்கமாம்.

இவ்வைதிக சைவம் இவ்வாற்றால் விண்பரப்பிற்கும் மண்பரப்பிற்கும் ஒரு மெய் விளக்காகி, மேலை வீட்டின்பமும் இஷ்ட சித்திகளுமெய்த முயல்வார்க்கு இன்றியமையாத தெய்வ அருள்நெறியாகி விளங்கும். மற்று இது நிற்க.

இப்பெரிய வைதிக சைவ மார்க்கத்தினைச் சிவபிரான் மெய் அருளாணை மந்திர தந்திரங்கொண்டு பிரதிஷ்டைசெய்து உபகரித்தருளிய பரமாசாரியர்கள் நால்வர். அவர் திருஞானசம்பந்தமூர்த்தி யென்னும் ஆளுடைய பிள்ளையார், வாகீசரென்னும் அப்பமூர்த்திகள், சுந்தரமூர்த்தி யென்னுந் தம்பிரான்றோழர், மாணிக்கவாசகரென்னும் வாதவூரடிகள் என்றிப் பெரியரே. இந்நாற் பெரும்பரமாசாரி

யர் பெருமைகள் புராணங்களும் பக்த விலாசங்களும் பிறவும் மிக விரித்தெடுத்துப் புகழப்படுவன. வேதநெறி கடைப்பிடித் தொழுகினாரும் சிவாகம நெறி கடைப்பிடித்தொழுகினாரும் இவ்விரண்டு நெறியும் ஒன்றேயாம் மெய்மை தெளிந்து அருள்வழி நின்றாரும் ஆகிய எல்லோரும் இப்பரமாசாரியர் நால்வர் திருவடிப்பக்தி வழிபாடே இக்கலிகாலத்துப் பிறவிப் பெருங்கடலைக் கடப்பித்துப் பேரா இன்பச் சிவத் தடங்கரை சேர்த்து உய்தி கூட்டும் அருட் புணையென்று கொண்டு அங்ஙனம் வழிபட்டு உய்தி கூடினார்; கூடுகின்றார். இப்பரமாசாரியர் நால்வருள் முன்னை மூவர் முதலிகளும் தேவாரமென்னும் திருவருட் சுருதியாலும் பின்னை வாதவூர்முதல்வர் திருவாசகமென்னும் திருவருட் சுருதியாலும் ஆருகதர் புத்தர் அவநெறிகள் அறமாற்றி இப்பாரில் வைதிக சைவமாம் பெருஞ்சமயம் நிறுத்தி உபதேசித்தருளினார். இந்நாற் பெரும் பரமாசாரியர்கள் தெய்வத் திருவருட் செல்வர்களாய்ச் சைவத் திருநெறி தனிபுரந்தருளினார்கள். இவர் அருளிச் செய்த திராவிடவேதத் திருமுறைகள் சிவபிரான் பரார்த்த பூசைக்கும் ஆன்மார்த்த பூசைக்கும் இன்றியமையாத நியம மந்திரங்களாய் விளங்குகின்றன. இத்திராவிடச் சுருதிகள் பதிகச்சாகைகள் தோறும் வேதாகம விழுப்பொருள் மிகவெடுத்து அவை ஒன்றும் நிலைகாட்டி விளக்கும். மேல் வருணத்தரான நாற்குலத்தந்தணர்களும் அங்கவ் வருண சங்கரப் பகுதியாரும் ஆகிய மேன்மக்கள் யாவரும் இத்தமிழ் வேதத் திருமுறைகள் சிவபிரான் திருச்செவிக்கினிய தேவார திருவாசகங்களாமென்று அப்பரமன் திருவடிப் பக்தி பணைத்து மிக ஓங்கப் பாராயணஞ் செய்யாநிற்பர். சிதம்பரம், சீகாழி, திருவாரூர், திருப்பெருந்துறை, காஞ்சி, மதுரை, திருவுத்தரகோசமங்கை, இராமேச்சுரம் முதலிய சிவாலயங்களெங்கும் இப்பரமாசாரியர்கள் திருவுருக்கள் மற்றை உண்மை நாயன்மார் திருவுருக்களோடு ஸ்தாபித்துப் பூசித்து வழிபடப் படுவனவாம். இப்பரமாசாரியர் அவதாரத் திருநாட்டிருவிழாக்களும் பரிபூரணத் திருநாட்டிருவிழாக்களும் அருட்பிரகாச அற்புதத் திருநாட்டிருவிழாக்களும் சிவாலயமெங்கெங்கும் திருமடமெங்கெங்கும் தென்னாடெல்லாம் மன்னி மிக விளங்குவனவாம். இப்பரமாசாரியர் திருவுருப் பிரதிஷ்டை செய்து பூசித்துத் திருவிழாக் கொண்டாடப்பெறாத திருக்கோயில்களும் திருமடங்களும் எந்த

வைபவம் பொருந்தினும் சிவஞான சம்பந்த மெய்விளக்கம் அத்தனை பெருமையாக இத்தரையிற் பொருந்தாவாம். சிவமுகோற்பவரான ஆதிசைவ வேதியரும், அயன் முகோற்பவரான அருமறை வேதியர், அரசர், வணிகர், வேளாண் மாந்தர் என்னும் நாற்பெருங் குலத்தரும், வருணக் கலப்பின் வந்தவருமான மேன்மக்களெல்லாம் இச்சீரிய திராவிட வேதந் தந்து வைதிக சைவந் திருந்த நிறுத்திய பரமாசாரியர் திருவடிப் பத்தித் தொழும்பராய் முத்திப் பெரும்பேறு கூடா நிற்பர். சங்கராசாரியர் முதலான குருமார்களும் மற்றை ஆசாரியர்களும் தாந் தாஞ் செய்த ஆரிய திராவிடப் பிரபந்தங்களால் இப்பரமாசாரியர் தெய்வத் திருப்புகழ் பலவாறு எடுத்துத் துதித்து அவர் பாதாரவிந்த பத்தி வழிபாடு பேணித் திருவருட் பேற்றிற்கு ஏக்கறு நிற்பர். இந் நாற் பெரும்பரமாசாரியர் பிரபாவம் இன்னும் அநந்தமாம்.

இப்பரமாசாரிய விளக்கத்துக்கு முக்கிய நிலைக்களமாம் பேறு பெற்ற காரணத்தால் மற்றைநாடுகளைக் காட்டிலும் தெய்வத்தமிழ் மொழி வழங்கும் இத்தென்னாடு மிக மேலாகி விளங்குகின்றது. இத் தென்னாட்டு வைதிக சைவ நன்மக்கள் இந்நாற்பெரும் பரமாசாரிய வைபவங்களோடொப்ப மற்றை ஆசாரிய வைபவம் பாராட்ட ஒரு காலும் சம்மதியுறார்; பூரணசந்திர விளக்கங்கண்டு களிகூர்ந்து வாழும் மன்னுயிர்கள் அதுபோல மற்றைத் தாரகாகண விளக்கங் கண்டு களிகூர ஒருப்படா.

இப்பரமாசாரியர் நால்வர் பிரபாவங்களும் தொகுத்து ஒருவாறு ஈண்டு உரைத்தாம். இந்நாற் பெரும் பரமாசாரியர் பிரபாவங்கள் தனித்தனி மேல் வகுத்துரைப்பாம். அது நிற்க.

அறுபத்துமும்மை நாயன்மாருட்பட்ட மற்றை நாயன்மார் பிரபாவமெல்லாம் இப்பரமாசாரியர் பிரபாவத்துள் பன்முறையானும் ஒன்றுபட்டு நடப்பனவேயாம். அரதத்த சிவாசாரியர், சோமசம்பு சிவாசாரியர், மெய்கண்ட சிவாசாரியர், அருணந்தி சிவாசாரியர், மறைஞானசம்பந்த சிவாசாரியர், உமாபதி சிவாசாரியர் என்றித் தொடக்கத்துத் திருவருட் செல்வர் பிரபாவங்களும் அதில் ஒன்றுபட்டு நடப்பனவேயாம்.

**பரமாசாரிய சுவாமிகள் நால்வர் பிரபாவம் முற்றிற்று.**

சபாபதி நாவலரவர்கள் பாடிய சிதம்பர சபாநாத புராணத்துள்ள சமய குரவர் வணக்கம் :—

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

மண்பரவு சீகாழிக் கவுணியர்தங் குலவாழ்வை மறையோர் தேவை
விண்பரவு பெரியநா யகிஞானங் குழைத்தூட்ட விரும்பி யுண்டு
பண்பரவு தமிழ்வேதம் பாடியவெம் பெருமானைப் பரம ஞான
நண்பருளி யடியாரை யாண்டருள்வள் ளலைப்பணிந்து நலிவு தீர்வாம்.

## திருநாவுக்கரசு நாயனார்

பாயுடுத்துத் தலைமயிரைப் பறித்தெறிந்து நின்றுண்ணு மமணர் பாழி
போயடுத்தங் கவர்புரிந்த வஞ்சமெலாஞ் சிவானந்த நிறைந்து பொங்கி
வாயிடத்து வருஞானப் பதிகத்தா லறுத்தருள்வா கீசர் சீர்த்தி
நோயெடுத்த கொடும்பிறவிப் பிணியொழிய வெந்நாளு நுவல்வா மன்றே.

## சுந்தரமூர்த்தி நாயனார்

திருந்துபுகழ்த் தமிழ்நாடு செய்தபெருந் தவத்தினாற் றிகழு மேன்மை
பொருந்தியுயர் நாவலூர்ச் சிவமறையோர் குலம்விளங்கப் போந்து வான
நிரந்தபொழி றிகழ்வெண்ணெய்ப் பரஞ்சோதி யருள்வாரி நிறைய வுண்டெம்
மரந்தைகெடத் திருத்தொண்டத் தொகைவகுத்த பெருமாளுக் கன்பு செய்வாம்.

## மாணிக்கவாசக சுவாமிகள்

வன்றொடையாற் பொருள்விரவி மயங்கவுயர் நால்வேதம் வகுத்தா னீச
னென்றருளா லவற்றைவடித் தானந்த வெள்ளமிகுந் தேற யாரு
மன்றுடைய பெருமானே பரம்பொருளென் றுணர்ந்துயமா மணிநேர் வாக்கின்
மென்றொடையாற் றமிழ்வேதம் வாய்மலர்ந்த வித்தகர்தாள் விரும்பி வாழ்வாம்.

**பரமாசாரியர் நால்வர் திருவடிகள் வாழ்க**

திருச்சிற்றம்பலம்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
183293
சென்னை 600 008

# மலேய சைவ சித்தாந்த சங்கம்
## குவாலாலம்பூர்

**நோக்கம் :—**

க. சைவ சித்தாந்த நூல்களைக்கற்றுத் தக்கவாறு அனுட்டித்தல்.

உ. காரியாலயமொன்று அமைத்துப் புத்தக சாலையும் வாசக சாலையும் ஸ்தாபித்தல்.

ங. பிரசங்க மூலமாகவும் துண்டுபத்திரங்கள் மூலமாகவும் சைவ சமயத்தைப் பரப்புதல்.

ச. தகுந்த ஆசிரியர்களை நியமித்துப் பாடங்கேட்டல்.

ரு. ஆலய வழிபாட்டிலும் வேறு சமய அனுஷ்டானங்களிலும் நிகழும் குறைகளை அகற்றிச் சைவ சமய சம்மதமானவைகளைப் பற்றி ஒழுகுதல்.

[சைவ சமயிகள் யாவரும் அங்கத்தினராதற் குரியர்]

உள்ளூரவர்கட்கு வருட சந்தா வெள்ளி சு ($ 6-00)

வெளியூரவர்கட்கு வருட சந்தா வெள்ளி க ($ 1-00)

9A
11-3